விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 16 ஷஃபான் 12 இதழ்: 18
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-2-1991

# குவைத் விடுதலை பெற்றது?
## ஈராக்கில் கடும் யுத்தம்

(குவைத்)
குவைத்தில் நேற்றுக் காலை 10-30 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்பட்ட அதே நேரத்தில் தெற்கு ஈராக்கில் கடும் சண்டை ஆரம்பமானது. இந்த யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## இருண்ட குவைத்

(வைத்நகர்)
குவைத்தில் சுமார் 500 எண்ணெய்க்கிணறுகள் கொழுந்துவிட்டு எரிவதால் குவைத்தின் பல பகுதிகளும் கரும் புகைகளால் சூழப்பட்டு இருண்டு காணப்படுகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## சதாமை கொல்ல
## யுத்தம் ஆரம்பம்

(பாக்தாத்)
ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை கொல்வதற்கான யுத்தம் ஒன்றை, அமெரிக்க பன்னாட்டுப் படைகள் ஆரம்
(4-ம் பக்கம் பார்க்க)

★ வடபகுதியிலிருந்து

# சகல ரயில்வே ஊழியர்க்கும்
# தெற்கே உடனடி இடமாற்றம்

(நமது அலுவலக நிருபர் 'தேவா')

வடபகுதியில் கடமையாற்றும் சகல ரயில்வே ஊழியர்களும், அடுத்த மாதம் 15ம் திகதி முதல் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

காங்கேசன்துறையில் இருந்து வவுனியாவரையிலுமுள்ள புகையிரத நிலையங்களில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் கிழக்கு, தென்பகுதி, மலைநாட்டுப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதற்கான உத்தரவு தற்போது கிடைத்துள்ளது.

கூடுதலான ஊழியர்கள் கம, மருதானை, திருகோணமலை, மன்னம்பிட்டி, மீரி
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் போராட்டத்திற்கு தி. மு. க. ஆதரவுண்டு

(சென்னை)
"விடுதலைப் புலிகளின் நாசி மீக ரீதியான உரிமைப் போராட்டத்திற்கு தி.மு.க. வின் ஆதரவும் அனுதாபமும் எப்பொழுதும் உண்டு."

தி.மு.க. தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு
(4ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் பங்கு போராட்டத்திற்கு அவசியம்

(யாழ்ப்பாணம்)
"தமிழீழத்தில் இராணுவத்தின் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடும் மாணவர் சமுதாயத்திற்கு ஆசிரியர்கள் முழு ஆதரவையும் வழங்கவேண்டும்."

இவ்வாறு கோப்பாய்-பலாலி ஆசிரியர் ஒன்றியம், 'மாணவர் எழுச்சியில் ஆசிரியர்களின் நிலைப்பாடு' என்னும் தலைப்பில் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மாணவர்களின் சகல போராட்டங்களுக்கும் ஆசிரியர்கள் கைகொடுத்து முனைப்
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் 5 இராணுவம் பலி

(திருமலை)
திருமலை மாவட்டத்தின் பல்வேறு முகாம்களிலுமிருந்து வெளியேறிய இராணுவம் மீது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் மீட்
(4-ம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று மலையகத்தில் நடைபெற்றது.
(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பதவிகளுக்கு சிங்களவர், முஸ்லிம் நியமனம்

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் அரசு அலுவலகங்கள், திணைக்களங்கள் பலவற்றில் தமிழர் வகித்துவந்த பதவிகளில் தற்போது முஸ்லிம், சிங்களவர் அமர்த்தப்பட்டுள்ளனராம்.

கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்த பின் பல ஊழியர்கள் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து அகதிகளாக வெளியேறினர்.

பாதுகாப்பின்மையால் பலர் இதுவரை கடமைக்கு திரும்பவில்லை. இவர்களது இடங்களுக்கு சிங்களவர், முஸ்லிம்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56-சி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள கிராமிய உற்பத்திகுழுக்களின் 300 பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கருத்தரங்கு இன்று காலை 9மணிக்கு யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## முஸ்லிம் குழுக்கள் அச்சுறுத்தல் மாநாடு கைவிடப்பட்டது

[கொழும்பு]
பாதுகாப்பின்மை காரணமாக இலங்கையில் நடைபெறவிருந்த 'சர்வதேச முதலீட்டாளர்களுக்கான' மாநாடொன்று கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு கடந்த மாதம் 25-ம் திகதி முதல் 28-ம் திகதி வரை கொழும்பில் நடைபெறவிருந்தது. எனினும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் மேற்கு நாட்டு
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் பல பகுதிகளிலும் தங்கியிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள், தமிழ்க் குழுக்களால் நாளாந்தம் கைதுசெய்யப்படுவது வழக்கமாகிவிட்டது.

இத்தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படும் பட்சத்தில் குறிப்பாக வெளிநாடு செல்
(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1991-04-22ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. சித்த மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்.

2. உதவி நூலகர் தரம் 1/உதவி நூலகர் தரம் 11

3. வர்த்தகமும்முகாமைப் படிப்புகளிலும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11.

சம்பள அளவுத்திட்டம்:

உதவி நூலகர் தரம் I சிரேஷ்ட விரிவுரையாளர் ரூபா 8000 - 5 X 250 - 9520/-

உதவி விரிவுரையாளர்; உதவி நூலகர் தரம் II) ரூபா 3900/- மாதமொன்றிற்கு (நியமனத்து) ஒரு வருடத்திற்கு

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23X10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:

உதவி நூலகர் தரம் I, தரம் II ஆகியவை வற்றைப் பொறுத்தவரை கணிதம், புள்ளிவிபரவியல், பௌதிகவியல் அல்லது இரசாயனவியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு உயர் பிரிவைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-02-25.

(எ-1120)


# வடமராட்சியில் இரு புதிய கல்வி அதிகாரிகள் நியமனம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தில் இரு புதிய கல்வியதிகாரிகள் பதவி ஏற்றுள்ளனர். தற்போது இக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரிகளின் தொகை நாலாக உயர்ந்துள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஶ்ரீகாந்தராஜ், பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள்உயர்தரக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். வேணுகோபால் ஆகிய இருவரும்மேகல்வியமைச்சால் கல்வியதிகாரிகளாகப் பதவி உயர்த்தப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளனர் திரு. வேணுகோபால் மன்னார் கல்வி அலுவலகத்திற்கு நியமனம்பெற்றபோதும் தற்போது வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்திலே பணியாற்றும் உத்தரவைகல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே வடமராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரியாக திரு. பீ. வீரபத்திரனும். கோட்டக்கல்வி அலுவலக பிரதம கல்வியதிகாரியாக திரு. எஸ். செல்லத்துரையும் மட்டுமே பணியாற்றி வந்தனர்.

வடமராட்சிகோட்டக்கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரிகளாகக் கடமையாற்றிய திரு. ஆ. வ. தங்கராஜா, திரு. எம். சண்முகநாதன் திரு. எஸ். இராஜலிங்கம் ஆகிய மூவரும் கடந்த வருடம் சேவையிலிருந்து இளைப்பாறினர்.

(52)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கலட்டி மகாமாரி அம்பாள் கோவிலில் இன்று காலை தேர் உற்சவமும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது. கோவிலின் வருடாந்த உற்சவங்கள் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகி இதுவரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (மா)

★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கந்தர்மடம் ஶ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடப் பரிபாலன சபையினரின் மாதாந்தச் சொற்பொழிவு இன்று 28ம் திகதி பிற்பகல் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

★

(யாழ்ப்பாணம்)

புதியமுறையில் போக்குவரத்து வண்டிகள், நீர் இறைக்கும் சாதனங்களை உருவாக்கக்கூடியவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியில் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது. (வி)

## காரியாலயம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு ஜூன் முதல் அலுவல்களை மாங்குளம் கண்டிவீதியில் மேற்கொள்ள முடியாதிருந்த முல்லைத்தீவு தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் தற்பொழுது வவுனிக்குளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன இலாகா விடுதியொன்றில் இயங்குவதற்கான சகல நடவடிக்கைகளும்மேற்கொள்ளப் பட்டுள்ளன.

எனவே இதுவரை அங்கு சமூகமளிக்காத மேற்படி அலுவலகத்தைச்சேர்ந்த ஊழியர்களை வவுனிக்குளத்திற்கு வருமாறு மாவட்ட முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

## சித்திரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தவக்காலத்தை முன்னிட்டு கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய சித்திரக்கண்காட்சி யாழ். பிரதானவீதி திருமறைக்கலாமன்றத்தில் மார்ச் மாதம் 3ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

இக்கண்காட்சியை யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர்திரு. சு. டிவகலாலாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்று மாலை மேற்படி நிலையத்தில் 'அனைத்தும் அவரே' என்னும் நாட்டுக் கூத்தும் நடைபெறவிருக்கிறது (மா)

## அறிவியல் துறை பரிசு

(பருத்தித்துறை)

வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தத்திற்கு அறிவியல் துறைக்கான தேசிய தமிழ் சாகித்தியப் பரிசு கிடைத்துள்ளது. வைத்திய கலாநிதி முருகானந்தன் எழுதிய "தாயாகப் போகும் உங்களுக்கு" நூலுக்காகவே இப் பரிசு கிடைத்துள்ளது. (42)


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மில்க்வைற் சுத்தமான வேப்பெண்ணெய் விளக்கெரிக்க மருத்துவ பாவனைக்கு, திரவ சவர்க்காரம் (Liquid Soap) துரித, சிக்கனமான சலவைக்கு சகல புடவை சங்கங்களிலும், கடைகளிலும் விற்பனையாகிறது. (சி 1121)

அடைவு கடைக்குரிய இரும்புக் கூடும், இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு. காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை தொடர்பு கொள்ளவும். 149/2, கஸ்தூரியார் வீதி, (றெலெக்ஸ் பேக்கரியின் முன்பாக) யாழ்ப்பாணம். (சி-4403)

## கோட் சூட்

திருமண கோட், சூட், வேஸ்ட் கோட் யாவும் எமது கைதேர்ந்த மாஸ்டர் கட்டரால் தற்கால நாகரீகத்துக்கு ஏற்றமுறையில் தைத்துத் தரப்படும் ஜெயபதி காம்ரெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். (சி 4401)

## மினி பஸ் விற்பனைக்கு

எனது மினி பஸ் எம் மொடல் 29 சிறி 8646 விற்பனைக்கு உண்டு. ம. சதிர்காமநாதன், 331/1, யாழ்ப்பாண ரோட், மானிப்பாய். (சி 4402)

## கலண்டர்கள், டயறிகள்

இவ்வாண்டுக்கான கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, (பிள்ளையார்கோவில் அருகில்) யாழ்ப்பாணம். (எ-1116)

## மீரா வெளியீடுகள்

வித்தியாசமான கதைகளின் கருத்தில், கன்னித்தமிழ் உரையாடல்களில் சிறந்த நாவல்கள், தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதியது துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி. பிக்பென்ஸ் (B) கிளிநொச்சி யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். (சி 439?)

## வெளிவந்து விட்டது!

பிரஜாதிபதி வருஷ

## திருக்கணித பஞ்சாங்கம்

விலை ரூபா 50.00

வழமையான விஷயங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டுள்ளமையால் உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## திருக்கணித நிலையம்

மட்டுவில், சாவகச்சேரி.

(சி 4400)

## ★ கொம்பியூட்டர் கல்வி

(COMPUTER PROGRAMMING BASIC)

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

— காலம் 4 மாதம்.

ஆரம்பம் 1-3-1991 (கிழமை நாட்கள்)
3-3-1991 (சனி, ஞாயிறு)

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP

— காலம் 4 மாதம்

(G. C. E. (O/L) சித்தியடைந்தவர்கள் அனுமதிக்கப்படுவர்)

ஆரம்பம் 2-3-1991

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(ஏ 1118)

# "இன அழிப்பிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க ஆதரவளிப்போம்" - பல்கலைக்கழக மாணவர் அவை

(யாழ்ப்பாணம்)

இன அழிப்பு பொருளாதார தடை உற்பத்தித்தடை ஆகியவற்றின் பாதிப்புக்களில் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு அளிப்போம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலையில் இடம் பெற்ற அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களின் படுகொலைகளைக் கண்டித்தும் மாணவர்களின் எழுச்சிக்கு ஆதரவு அளித்தும் மாணவர் அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சிறிலங்கா அரசானது காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தமிழ்மக்களிடையே பட்டினிச்சாவை ஏற்படுத்தவும் பொருளாதார தடையை விதித்து அதனை இறுக்கமாக இராணுவத்தின் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் விமானக்குண்டு வீச்சுமூலம் பாடசாலைக்கட்டிடங்களை தகர்த்தது. பின்னர் பாடசாலைகளை மாணவர்களுடன் சேர்த்து அழிப்பதற்கு விமானக்குண்டுகளை வீசியது. இன்று இவற்றிற்கு மேலாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை படுகொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களின் கல்வியையும் சீரழிப்பதற்கான நடவடிக்கை இது என்பதனை உணர்த்துகின்றது.

இக்கல்விச் சீரழிவினை மேலும் வலுவூட்டுவதாக க. பொ. த. (உ/த), க. பொ. த. (சா/த) பரீட்சைகள் பின்போடப்படுவதும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் தீயிடப்பட்டதும் அமைந்திருக்கின்றது;

இராணுவக் கெடுபிடி, பொருளாதார நெருக்கடி என்பனவற்றின் மத்தியிலும் எமது மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது எனும் நல்லாய சிந்தனையுடன் தமது உயிரையும் துச்சமெனமதித்து சேவை புரிந்த அதிபர்கள். ஆசிரியர்கள் படுகொலைகளைக்கண்டு கவலையடையும் அதேவேளை, இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ்மகன் எவனும் இக்கொடூர நிகழ்வு பற்றி பாராமுகமாக இருக்கமாட்டான் என்பதனையும் தெரிவித்துக் கொள்வதுடன் சர்வதேச சமூகமும் சிறிலங்கா இனவெறி அரசின் நடவடிக்கைகளை புரிந்து கொள்ளவேண்டும்;

சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ்மாணவ சமூகத்துக்கு விடப்பட்ட அறைகூவலாகவே ஏற்று அதற்கேற்ப எமது கல்வியை தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை எமது பாதுகாப்பையும் நாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதனை இது எடுத்து விளக்குகிறது. இதனை உணர்ந்து எமது நடவடிக்கைகள் முன் உணர்வாக இருப்பதே சிறிலங்கா அரசின் முகத்திரையை கிழித்தெறிவதாக அமையும் என்பதனை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

இச் சம்பவத்தின்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதுடன் இது தொடர்பான எழுச்சி நடவடிக்கைகளிக்கும் சிறிலங்கரசின் இன அழிப்பு பொருளாதாரத்தடை, உற்பத்தித்தடை ஆகியவற்றின் பாதிப்புகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு அளிப்போம் என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

## இராசி பலன்

28-02-1991

வியாழக்கிழமை

மேடம்: அவசரப் போக்கு, மனக்குறை, குடும்பப் பிரிவினை;

இடபம்: தனித்திருத்தல், அவமதிப்பு, தொழில் பிரச்சனை.

மிதுனம்; இளையவர் உதவி, கடன் வசூல், தொழில் சிறப்பு.

கடகம்: வாக்குக் கலகம், பெண் தொல்லை, வைத்தியச் செலவு;

சிங்கம்: புதிய ஸ்தானம், காரிய சித்தி. விருந்துபசாரம்.

கன்னி; மனக்கிலேசம், அச்சுறுத்தல், குடும்பக் கஷ்டம்.

துலாம்; புதுப் பொருள் சேர்க்கை, அசாக்கியத் துணிவு, பணவரவு;

விருச்சிகம்: கடித உறவு, தொழில் லாபம், குடும்பக் கலகம்;

தனுசு: மனப் போராட்டம், அற்பர் சிநேகிதம், அலைச்சல்;

மகரம்: குடும்பச் சச்சரவு, வழிதவறுதல், தொழில் பாதிப்பு;

கும்பம்: எண்ணியது கைகூடும், தொழில் சிறப்பு. குடும்ப மகிழ்ச்சி,

மீனம்: எதிர்பாராத தொல்லை, இனசனவருகை, ஆடம்பரச் செலவு.

ஜோஸ்யர்

# எட்டு மாதமாக சம்பளம் இல்லை

[யாழ்ப்பாணம்]

ஒட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களுக்கும் கடந்தஜூன் மாதத்திலிருந்து ஜனவரிமாதம் வரையிலான 8 மாத சம்பளம் இதுவரையும் அரசினால் வழங்கப்படவில்லை.

சுமார் 100 ஊழியர்கள் வரையில் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஊழியர்களுக்கு இதுவரையில் எதுவித அரச நிவாரணமும் வழங்கப்படவில்லை;

சம்பள விடயமாக கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. வரதராசா, கணக்காளர் திரு. சிவராமலிங்கம் ஆகியோர் சென்ற மாதம் கைத் தொழில் அமைச்சு உயர் அதிகாரி திரு. செல்றிம் பெரேராவிடம் நேரடியாகத் தெரிவித்தும் எதுவித பயனும் அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (56)

# புலோலியில் பகல் திருட்டு அதிகரிப்பு

(பருத்தித்துறை)

புலோலிப் பகுதியில் பகல் வேளைகளில் கொள்ளைகள் அதிகரித்துவருவதாகப் பொது மக்கள் புகார் செய்துள்ளனர்.

புலோலி தெற்கிலுள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் பகல் வேளையில் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த சுவர் மணிக்கூடு ஒன்று திருடப்பட்டுள்ளது;

வர்த்தகரொருவரின் வீட்டில் மேசையில் வைக்கப்பட்டிருந்த நல்லெண்ணெயுடன் கூடிய போத்தலும் திருடப்பட்டுள்ளது.

மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பகுதியில் சைக்கிள்களும் திருட்டுப்போவதாக அறிவிக்கப்படுகிறது. (53)

## இருண்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்ணெய்க் கிணறுகளுக்கு ஈராக்கே தீவைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள போதிலும் யுத்தத்தின் போதே தீ ஏற்பட்டதாக ஈராக் தெரிவித்துள்ளது. இத்தீ அணைய பல வாரங்கள் செல்லுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எந்த ஒரு போராளிக் குழுவும் தமிழகத்தை ஆயுததளமாக பயன்படுத்த திராவிட முன்னேற்ற கழகம் அனுமதியாது. இலங்கைப் போராளிக் குழுக்களுக்கு எதிராக தி.மு.க. அரசு செயற்படவில்லை என வலியுறுத்தி பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் வலிந்து செய்திகளை வெளியிட்டு வருவது தி. மு. க. களங்கப்படுத்தும் ஒரு செயலென்றும் அவர் குற்றம் சாட்டினார்.

(க)

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காகத் தங்கியிருக்கும் இளைஞர்களிடம் 10 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு லட்சம் ரூபா வரை பெற்றோர்களிடம் பறித்த பின்பே இவர்களை விடுதலை செய்கின்றனர்.

இவர்களைத் தமிழ்க் குழுக்களிடமிருந்து விடுவிப்பதில் வெளிநாட்டு முகவர்கள் முன்னணியில் இருந்துகொண்டு அவர்களும் பணம் கறக்கிறார்களாம். (56)

## சதாமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் பல பகுதிகளிலும் பன்னாட்டுப் படைகள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மூலம் தரையிறக்கப்பட்டுள்ளதுடன், குவைத், சவூதி எல்லைகள் ஊடாக ஆயிரக்கணக்கான படைகள் ஈராக்கினுள் நுழைந்துள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைப் பல நாடுகளும் கண்டித்துள்ளன. (கி)

## மரண அறிவித்தல்

### செல்லையா இராஜகோபால்



இல. 36, யாழ். வீதியை பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா இராஜகோபால் (இளைப்பாறிய முன்னாள் C. W. E. மனேஜர்) சென்ற வெள்ளிக்கிழமை (22-02-1991ல்) நோர்வேயில் காலமானார். இவர் காலஞ்சென்ற சி. பொ. செல்லையா, லெட்சுமி அவர்களின் மகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், கிரிதரன், நளாயினி, மீரா ஆகியோரின் தந்தையும், வாசுதேவன், புவனேஸ்வரி, மகாதேவன் ஆகியோரின் சகோதரரும், பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், மோகன், விஜயகுமார் ஆகியோரின் மாமனும், சுதர்ஷினி, தாட்ஷாயினி ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: ப. விஜயகுமார்
மருமகன்

19, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4404)

## ஆசிரியர்களின்

(1ம் பக்கத்
புடன் போரா
வேண்டும்என
மேலும் குறிப்பி

## வடபகுதியில்

(1-ம் பக்கத்
மலை, புசல்ல
ஆசிய புகையி
க்கு மாற்றப்
உயர் அதி
சிற்றூழியர் வ
அடுத்த மாத
முன் தமக்கு
நிலையங்களுக்
டும் எனவு
பட்டுள்ளன

## முஸ்லிம்

(1ம் பக்
பிரதிநிதிகள
சர்வதேச
வாதக்குழுக்
தல் ஏற்பட
மாநாடு
வளைகுடா
இவர்கள் தா
சந்தர்ப்பம் ஏ
மென்றும் தெ
ளது.

## தோட்டத்

(1ம் பக்கத்
பலலட்சம்
தொழிலாளர்
நிறுத்தத்தில்
தாகவும் இப்போ
பெரும் வெற்றிய
தாகவும் மலையக
வரும் செய்திகள்
கின்றன

## குவைத்

(1-ம் பக்கத் தொ
ஈராக்கிய படை
முடன் போரிடுவ
பன்னாட்டுப் படைகள்
பிரயத்தனத்துடன்
களை சமாளித்துவரு
தெரிவிக்கப்படுகிறது.
ஈராக்கிடமிருந்து
த்தை மீட்கும் ப
வடைந்துவிட்ட
சதாமின் பலத்தை
பணி முனைப்புடன்
வதாகவும் அம்மா
வரும் செய்திகள்
கின்றன.

## புலிகள் தாக்குத

(1ம் பக்கத் தொ
கப்பட்டுள்ளது.
பாலம்போட்டாறு
யிலுள்ள ஜெயபுரம்
காடு, கோயில் மு
ருந்து வெளியேறி
னர் மீது நேற்று
கள் கடும் தாக்கு
கொண்டபோதே
வத்தினர் பலியாகி
கொல்லப்பட்ட
மடைந்த இராணு
மிருந்து பெருமள
கள் கைப்பற்றப்

## சினைப்பர் தாக்

இதேவேளை ஆ
இராணுவ முகாமி
காலை காவலரன்
முயற்சித்த இராணு
மீது விடுதலைப்புலிக
பர் தாக்குதலை தொ
கவும் படையினருக்கு
ஏற்பட்டதாகவும்
கப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 86-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.